# விசேட அறிவித்தல்

## EXECUTIVE LEVEL EXAMINATION , MARCH 2016

**அனைத்து Executive Level பரீட்சார்த்திகளுக்கும்:**

இலங்கை CA நிர்வாக அளவிலான தேர்வுகள் நாடளாவிய ரீதியில் 2016 மார்ச் மாதம் இடம்பெறவுள்ளது. விபரங்கள் பின்வருமாறு:

- 2016 மார்ச் 20 ஞாயிற்றுக்கிழமை
- 2016 மார்ச் 26 சனிக்கிழமை
- 2016 மார்ச் 27 ஞாயிற்றுக்கிழமை

பரீட்சைக்கான நேர அட்டவணையை, இலங்கை CA இணையத்தளத்தில் மாணவர்களுக்கான பக்கத்தில் பரீட்சை விபரங்களின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைக்குத் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் 2016 மார்ச் 10ம் திகதிக்குள் பிரவேச அனுமதிபத்திரம் அனுப்பப்படும்.

பு‘ர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களின் பிரவேச அனுமதி பத்திரங்கள் பரீட்சை பிரிவில் வைக்கப்படும். கீழ்வரும் தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் பட்சத்தில் பிரவேச அனுமதி பத்திரம் கையளிக்கப்படும்.

| செயற்பாடு | நிலைப்பாடு |
|---|---|
| தேர்விற்கு நீங்கள் தெரிவு செய்த பாடம் அல்லது பாடங்களின் கற்றல் பொதிகளின் கொள்வனவு | ✓ |
| 2016 வருடத்தின் முழுமையாக புதிப்பிக்கப்பட்ட மாணவநிலை | ✓ |
| நீங்கள் பரீட்சைக்காகத் தெரிவு செய்த பாடங்களுக்கான முழுமையாக செலுத்தப்பட்ட பரீட்சைக்கட்டணங்கள் | ✓ |

- 2016 மார்ச் மாதம் இடம்பெறும் பரீட்சைக்கான அனுமதிக்கு, மாணவர்கள் மேற்குறிப்பிட்டவற்றை 2016 பெப்ரவரி மாதம் 25 திகதி அல்லது அதற்கு முன்னர் உறுதிப்படுத்த வேண்டும்.
- பிரவேச அனுமதிப்பத்திரத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப உங்கள் பரீட்சை பிரவேசம் அதிகாரபு‘ர்வ நபரினால் அத்தாட்சிபடுத்தப்பட்டிருக்க வேண்டும்.
- பரீட்சை பிரவேசம் சம்பந்தப்பட்ட விபரங்கள் அனைத்தும் 2016 மார்ச் மாதம் 14 ஆம் திகதிக்குள் 011 2352000 எண்ணிற்கு அழைப்பை ஏற்படுத்தியோ அல்லது நேரடியாக பரீட்சைப் பிரிவிற்கு வருகை தந்தோ பெறப்படல் வேண்டும்.
- உங்கள் விண்ணப்படிவத்தில் நீங்கள் குறிப்பிட்ட பரீட்சை நிலையம் சரியாக உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் (உங்கள் பிரவேச அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டதற்கேற்ப)
- பரீட்சை ஆரம்பிப்பதற்கு 35 நிமிடங்களுக்கு முன்னராக ஆசனத்தில் நீங்கள் இருக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.
- பரீட்சார்த்திகள் அனைவரும் தமது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டை பரீட்சை நிலையத்தில் அத்தாட்சிப்படுத்த வேண்டும்.
- மேற்குறிப்பிட்ட பத்திரங்களை அத்தாட்சிபடுத்த முடியாத பட்சத்தில் கடவுச்சீட்டு அளவிலான பரீட்சார்த்தியின் புகைப்படத்தில் இலங்கை CA மாணவ பதிவு பிரிவு அல்லது கிராமசேவகரினால் அடையாளம் உறுதிசெய்யப்படல் வேண்டும்.
- நிகழ்ச்சி தொகுக்கப்பட முடியாத கணிப்பீட்டு கருவி (non-programmable scientific calculator) மட்டுமே பரீட்சை நிலையத்திற்குள் அனுமதிக்கப்படும். ஏனைய எந்த பொருட்களும் பரீட்சை நிலையத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டாது.